**Deposition of Witness**
**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, THIRUMAYAM**

**O.S. No. 343 /2023**

Deposition of – PW1 / 2nd Plaintiff

| | | | |
|---|---|---|---|
| Name : | குமரேசன் | Caste : | |
| Father's Name : | அடைக்கன் | Calling : | |
| Village : | செங்கீரை | Religion: | |
| District : | புதுக்கோட்டை | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 05.12.2023

**முதல் விசாரணை**

நான் செங்கீரை கிராமம், திருமயம் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் நான் 2ம் வாதி ஆவேன். இவ்வழக்கில் நான் எனது தரப்பிலிருந்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படும் பிரமாண வாக்குமூலம் என்னால் கொடுக்கப்பட்டுள்ளதுதான். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தினை நான் படித்து பார்த்து அதில் கூறியுள்ள சங்கதிகள் சரியென ஒப்புக்கொண்டு தேவையான இடங்களில் என் கையொப்பம் போட்டுள்ளேன். எனது தரப்புக்கு ஆதரவாக ஆவணங்களை குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன்.

| வ.எண் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 1 | – | வெள்ளைகுட்டி மகன் அடைக்கன் பெயரில் ஏற்பட்ட நிலவுடைமை மேம்பாட்டுத்திட்ட பட்டா (ஆவணத்தின் உண்மை மற்றும் ஏற்புத் தன்மை குறித்து எதிர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) | அசல் |
| வா.சா.ஆ. 2 | 01.11.2018 | வெள்ளைகுட்டி மகன் அடைக்கன் பெயரில் ஏற்பட்ட 10(1) கணினி சிட்டா(ஆவணத்தின் உண்மை மற்றும் ஏற்புத் தன்மை குறித்து எதிர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு | கணினி பதிவிறக்க நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்படுகிறது) | |
| வா.சா.ஆ. 3 | 01.11.2018 | அடைக்கன் பெயரில் ஏற்பட்ட அ பதிவேடு(ஆவணத்தின் உண்மை மற்றும் ஏற்புத் தன்மை குறித்து எதிர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) | கணினி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ. 4 | 01.11.2018 | அடைக்கன் பெயரில் ஏற்பட்ட சாகுபடி அடங்கல் கணக்கு (கிராம நிர்வாக அலுவலர் கொடுத்தது)(ஆவணத்தின் உண்மை மற்றும் ஏற்புத் தன்மை குறித்து எதிர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) | உண்மை நகல் |

**ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**